சுற்று நிருபம்:- 06/2015

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாண சபை
09.06.2015

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து
கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சமாசங்களின்
தலைவர்களுக்கும்

## கூட்டுறவு பணியாளர் கூட்டுறவுப்பயிற்சி பெறுவதற்கான நிதியுதவியும் ஊக்குவிப்புத் தொகை வழங்கலும்

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 1998.12.28 ஆம் திகதிய 39/98 ஆம் இலக்க “கூட்டுறவு ஆளணியினர் கூட்டுறவுப்பயிற்சி பெறுவதற்கான நிதி ஊக்குவிப்பினை வழங்கல்” எனும் தலைப்பிலமைந்த சுற்று நிருபத்தின் உள்ளடக்கங்கள் புதிய விடயங்கள் சேர்க்கப்பட்டு வெளியிடப்படுகிறது.

1. கூட்டுறவுப் பணியாளரின் திறன் விருத்திக்காக வடக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் மாவட்டக் கூட்டுறவுச் சபைகளினால் நடாத்தப்படும் பயிற்சிநெறிகளைத் தொடருவதற்கான ஆர்வத்தினை ஏற்படுத்தும் நோக்கோடு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2. 1988.06.30 ஆம் திகதிய 165/88 ஆம் இலக்க சுற்று நிருபத்தில் குறிப்பிடப்படும் ஐந்து வகையான பணியாளர் ஆளணி எல்லகைளுக்குள் அடங்கும் பதவிகள் மற்றும் அப்பதவியினர் சித்தி எய்த வேண்டிய பயிற்சிநெறிகள் என்பன கீழுள்ள அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| இல | ஆளணி வகை | பதவிகள் | சித்தி எய்த வேண்டிய பயிற்சிநெறிகள் |
|---|---|---|---|
| 01 | அதி உயர் தர முகாமையாளர் நிலை | சம்பளத் திட்ட இல. 1,2,3 ஐக் கொண்ட பதவிகள் | 1. கூட்டுறவு முகாமை, கணக்கியல் சான்றிதழ்ப் பயிற்சி நெறி<br>2. கூட்டுறவு ஊழியர் தராதரப் பயிற்சிநெறி உயர்பிரிவு |
| 02 | சிரேஷ்ட முகாமையாளர் நிலை | சம்பளத் திட்ட இல. 3,4,5,6,7 ஐக் கொண்ட பதவிகள் | கூட்டுறவு ஊழியர் தராதரப் பயிற்சிநெறி உயர்பிரிவு |
| 03 | நடுத்தர முகாமையாளர் நிலை | சம்பளத் திட்ட இல. 6,7,8,9,10 ஐக் கொண்ட பதவிகள் | கூட்டுறவு ஊழியர் தராதரப் பயிற்சிநெறி உயர்பிரிவு / சாதாரண பிரிவு |
| 04 | மேற்பார்வையாளர் நிலை | சம்பளத் திட்ட இல. 9,10,11,12,13 ஐக் கொண்ட பதவிகள் | கூட்டுறவு ஊழியர் தராதரப் பயிற்சிநெறி சாதாரண பிரிவு |
| 05 | நிறைவேற்றாளர் நிலை | சம்பளத் திட்ட இல. 13,14,15,16,17 ஐக் கொண்ட பதவிகள் | கூட்டுறவு ஊழியர் தராதரப் பயிற்சிநெறி கீழ்ப்பிரிவு (கனிஷ்ட பிரிவு/சாதாரண பிரிவு) |

3. மேலுள்ள அட்டவணையில் குறித்துக் காட்டப்பட்ட ஆளணி வகைக்குரிய பதவிகளில் பணியாற்றும் பணியாளர்கள் தத்தமது பணிகளுக்குப்பொருத்தமான கூட்டுறவு ஊழியர் தராதரப் பயிற்சிநெறிகளில் சித்தியடைந்திருந்தால், அப்பணியாளர்களுக்கு அவர்கள் இறுதியாக உழைத்துப் பெற்ற சம்பள ஏற்றத் தொகையின் மூன்று மடங்குகளுக்குச் சமமான தொகையொன்றை ஊக்குவிப்புக் கொடுப்பனவாக மாதாந்தம் வழங்குதல் வேண்டும்

4. கூட்டுறவுப் பணியாளர் ஒருவர் அவருடைய ஆளணி வகைக்குரிய ஒரு கூட்டுறவுப் பயிற்சித் தராதரத்திற்கே மேற்படி ஊக்குவிப்பை பெற உரித்துடையவராவர். எனினும் உரிய ஆளணி வகைக்குரிய பயிற்சித் தராதரத்தினைப் பெறாது உயர்ந்த பயிற்சித் தராதரத்தினைப் பெற்றிருந்தால் தமது ஆளணி வகைக்குரிய பிரிவு 3 இல் குறிப்பிடப்படும் ஊக்குவிப்புத் தொகையினை மாதாந்தம் பெற்றுக்கொள்ள முடியும்.

5. தற்போது சேவையிலிருக்கும் பணியாளர் அல்லது புதிய நியமனம் பெறுபவர் அல்லது பதவியுயர்வு பெறும் பணியாளர் ஒருவர் கூட்டுறவு ஊழியர் தாரதரப் பயிற்சிநெறித் தகைமையை அடிப்படைக் கல்வித் தகைமையாகக் கொண்டிருப்பின் இவ் ஊக்குவிப்புக் கொடுப்பனவை பெறுவதற்கு தகுதியற்றவராவர்.

6. இவ் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வருடாந்த சம்பள ஏற்றத்துடன் சேர்த்தலாகாது. மாறாக பணியாளர் கொடுப்பனவுப் பட்டியலில் தனியான நிரலில் கணக்கீடு செய்து வழங்குதல் வேண்டும்.

7. பணியாளர் ஒருவர் தனது சம்பள அளவுத் திட்டத்தின் உச்ச சம்பளப் படிநிலையை அடைந்திருப்பினும், இறுதியாக உழைத்துப் பெற்ற சம்பள ஏற்றத் தொகையின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படும் இவ் ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்கு உரித்துடையவராவர்.

8. கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் குறித்தவொரு பதவியில் நியமனம் பெறும் பணியாளர் ஒருவர் தமது ஆளணி வகைக்குரிய கூட்டுறவு தராதரப் பயிற்சிநெறியினை குறித்த பதவிக்கான நியமனத் திகதியில் இருந்து ஐந்து வருட காலத்திற்குள் பூர்த்தி செய்து இவ் ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெறுதல் வேண்டும். இவ்வாறான பணியாளர் தனது பயிற்சிநெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் மாவட்ட கூட்டுறவுச் சபையால் தீர்மானிக்கப்படும் அவருக்கான பயிற்சிநெறிச் செலவுத் தொகையின் 30% வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தினால் வழங்கப்படும். இவ்வேற்பாடு 2015.06.01 முதல் அமுலுக்கு வருமென்பதோடு காலத்திற்குக் காலம் முன்னறிவித்தலுடன் இந்த வீதம் மாற்றத்திற்கும் உட்படலாம்.

9. குறித்தவொரு பதவிக்கான நியமனத்திகதியிலிருந்து ஐந்து வருடங்களுக்கு மேலாக அதே பதவியில் சேவையிலுள்ள பணியாளர் தமது ஆளணி வகைக்குரிய கூட்டுறவு தராதரப் பயிற்சிநெறியைப் பிந்திய காலத்தில் பூர்த்தி செய்திருந்தால் அல்லது எதிர் வரும் காலத்தில் பூர்த்தி செய்யும் பட்சத்தில் அவர் இறுதியாக உழைத்துப் பெற்ற சம்பள ஏற்றத்திற்குச் சமமான தொகை ஒன்றினை (ஒரு சம்பள ஏற்றத் தொகை) ஊக்குவிப்புக் கொடுப்பனவாக பெற்றுக் கொள்ளலாம். இக் கொடுப்பனவுகள் 2015.06.01 இல் இருந்தே அமுலாவதன் காரணமாக நிலுவைக் கொடுப்பனவுக் கோரிக்கைகள் எதுவும் கவனத்தில் கொள்ளப்படலாகாது.

10. பிரிவுகள் 8 மற்றும் 9 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்கள் தமது ஆளணி வகைக்குரிய கூட்டுறவுத் தராதரத்தினை விட உயர்ந்த தராதர பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்திருக்கும் சந்தர்ப்பங்களில், குறித்த பிரிவுகளில் கூறப்பட்ட கால எல்லைகள் பொருத்தமற்றவையாவதுடன் அவர்கள் பிரிவு 04 இன் படி ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளையும் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர்.

11. பயிற்சிநெறிகளைப் பூர்த்தி செய்த பணியாளர்கள் பெறுமதி சேர்க்கப்பட்டதும் சிறந்ததுமான சேவையைச் சங்கங்களிற்கு வழங்குவார்களாகையால், இப்பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் பணியாளர்களை உரிய பதிலீட்டு ஏற்பாட்டுடன் விடுவிப்பதற்குச் சங்கங்கள் முன்வரவேண்டும்.

12. இவ் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு முன்னர் உரிய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் முன்னனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

2015.05.28 ஆம் திகதிய கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுத் தீர்மானப்படியான குறித்த சுற்று நிருபம், வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் ஒப்புதலுடனும் வடக்கு மாகாண கௌரவ கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அவர்களின் அங்கீகாரத்துடனும் வெளியிடப்படுகிறது.

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாண சபை